(2019) 3 எஸ்சிஆர் 1078

**சிவ் சங்கர் பிரசாத் சிங்**

**எதிர்**

**பீகார் மாநில அரசு**

( குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1804 / 2011 )

2019–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28–ஆம் நாள்

**( மாண்புமிகு நீதியரசர் திரு. அபெய் மனோகர் சாப்ரே**

**மற்றும்**

**மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி )**

**தண்டனைச் சட்டம், 1860 – பிரிவுகள் 409, 477அ உடணினைந்த பிரிவு 120ஆ – ஊழல் தடுப்புச் சட்டம் ,1947 – பிரிவு 5(2) உடணினைந்த பிரிவு 5(1) (இ) மற்றும் (ஈ) – மேல்முறையீட்டாளர்கள்/ குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கூட்டுச் சதி செய்து, உரமூட்டைகளை கையாடல் செய்து, மற்றும் பதிவேடுகளில் பொய்யான உள்ளீடுகளை செய்தனர் என்பது அரசு தரப்பு வழக்காகும் – புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது – மேல்முறையீட்டாளர்கள்/1 மற்றம் 3–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், இதச பிரிவு 120ஆ உடணினைந்த பிரிவுகள் 409 மற்றும் 477–அ–இன் கீழான குற்றத்திற்காகவும், மேலும் ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 5(1)(ஈ)–ன் கீழான குற்றத்திற்காகவும் அதனுடன்**

பிரிவு 5(2)–ன் கீழான தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக மத்தியப் புலனாய்வுத் துறை (சிபிஐ) சிறப்பு நீதிபதியால் தண்டிக்கப்பட்டார் – உயர்நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பை உறுதி செய்தது – மேல்முறையீடு, முடிவு, பதிவுறுக்களிலுள்ள வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியங்களை முழுமையாக பரிசீலித்தபோது, அரசுத் தரப்பு நியாயமான காரணத்திற்கு அப்பால் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபித்தது – குற்றவாளிகளின் உண்மையான உட்கருத் கையாடல் செய்வது என்ற குற்றச்சாட்டை தவிர, குற்றவாளிகள் அனைவரும் கூட்டுச்சதி செய்தனர் என்பதே அரசு தரப்பின் முக்கிய வழக்காகும் –ஆதலால் மேல்முறையீட்டாளர்கள் எஞ்சிய தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

நீதிமன்றத்தால் மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டது

முடிவு – 1 ஆரம்பத்திலேயே, நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது முதலில் அளிக்கப்பட்ட புகாரில் 540 யூரியா பைகள் மட்டுமே கையாடல் செய்யப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ஆனால் மொத்தமாக 1040 யூரியா பைகள் கையாடல் செய்யப்பட்டிருப்பது புலனாய்வில் வெளிப்பட்டது. மேல்முறையீட்டாளர்களும் மற்றும் மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் குற்றஞ்சார்ந்த கூட்டுசதி செய்தனர் மற்றும் கணக்குகளை பொய்யாக்குவதில் ஈடுபட்டனர் என்பது அரசு தரப்பின்

முக்கிய குற்றச்சாட்டாகும். 1040 யூரியா பைகளில் 500 பைகள் பி.ஆர்.ஐ 7851 மற்றும் பி.எச்.எப் 3155 எண்களை தாங்கிய சரக்கு வண்டிகளில் தலா 250 பைகள் வீதம் தில்ராத்தில் உள்ள இந்திய உணவுப் பொருள் கழகத்தின் கிடங்கில் ஒப்படைப்பு செய்வதற்காக ஏற்றப்பட்டதாக காட்டப்பட்டது. ஆனால் அந்த மாதிரி உர முட்டைகள் எதுவும் உண்மையாக ஒப்படைப்பு செய்யப்படவில்லை எனக் கண்டறியப்பட்டது மற்றும் இ,உ.பொ. கழகத்தின் பதிவேடுகள் பொய்யாக்கப்பட்டன. குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1804/2011 –ல் மேல்முறையீட்டாளர் / குற்றம்சாட்டப்பட்ட 3–ம் நபருக்கு எதிராக அரசு தரப்பின் முக்கிய வழக்கு என்னவென்றால், வாயிலில் உள்ள பதிவேடுகளில் உள்ளீடுகள் செய்வதற்கு குற்றம்சாட்டப்பட்ட 3–ம் நபரே பொறுப்பாளியாவார் மற்றும் 500 யூரியா பைகள் உண்மையாக வராதபோது அத்தகைய உரங்கள் வந்து சேர்ந்ததாக பொய்யான உள்ளீடுகளை இட்டுள்ளார்.. இதைப்போலவே மற்றும் அதற்கேற்ப, மற்ற பதிவேடுகளான 'ஓ' மற்றும் 'ஜி' பதிவேடுகளில் பொய்யான உள்ளீடுகள் பதிவானதற்கு மேல்முறையீட்டாளர்/ குற்றஞ்சாட்டப்பட்ட 1/ம் நபரே பொறுப்பாளியாவார். முதலில் அளிக்கப்பட்ட புகாரில் 540 யூரியா பைகள் மட்டுமே கையாடல் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதாலேயே , விசாரணைக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையில் மொத்தமாக 1040 யூரியா பைகள் கையாடல்

செய்யப்பட்டுருப்பதாக வெளிப்படுத்தியிருந்ததை ஒருவரும் புறக்கணிக்கமுடியாது. அ.சா.21 ஆக விசாரிக்கப்பட்ட புலானய்வு அதிகாரியின் வாக்குமுலத்தில் இருந்தும் இது தெளிவாகிறது. இதுவரையில் , 500 யூரியா பைகளை பொறுத்தவரையில் அவைகள் பி.ஆர்.ஐ 7851 மற்றும் பி.எச்.எப் 3155 எண்களை தாங்கிய சரக்கு வண்டிகளில் ஏற்றப்பட்டன ஆனால் அவைகள் தில்ராத்தில் உள்ள இ.உ.பொ. கழகத்தின் கிடங்கிற்கு கொண்டுசெல்லப்படவில்லை என பதிவான ஆதாரங்களில் இருந்து தெளிவாகிறது. பிரதான வாயிலில் உள்ள பதிவேடு மற்றும் 'ஒ' மற்றும் 'ஜி' படிவத்திற்காக பராமரிக்கப்படும் மற்ற பதிவேடுகளில் அந்த அளவு உரங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக காட்டப்படுவதற்காக பொய்யான உள்ளீடுகளை இட்டுள்ளனர். ( பத்தி 19 )

2. பதிவாவணத்திலுள்ள ஒட்டுமொத்த வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியத்தை பரிசீலித்ததன்பேரில், அரசுத் தரப்பு நியாயமான காரணத்திற்கு அப்பால் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கத் தவறிவிட்டது என்று நாங்கள் கருதுகிறோம். பதிவாவணத்திலுள்ள சான்றாவணத்தை கருத்திற்கொண்டு, விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டு, மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்ட காண்முடிவுகளில் தலையீடு கோரும் அளவிற்கு அது முறைத்திறம்பியதோ பிழையானதோ

**அல்ல என கூறமுடியாது. குற்றமுறு உட்கருத்துடன் கையாடல் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டைத் தவிற, அனைத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களும் கூட்டுச்சதியில் ஈடுபட்டனர் என்றும், அவர்கள் இதச பிரிவு 120 ஆ –இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என்பது அரசுத் தரப்பின் குறிப்பிட்ட வழக்காகும். மேலும் மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் அதாவது ராம் நாத் சர்மா (எ) ராம் நாத் பிரசாத் சர்மாவினால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனு, சி.அ.ம. (குற்றவியல்) எண் 4005/2009, 24.7.2009 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் சிறப்பு அனுமதி மனு நிலையிலேயே இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். ( பத்தி 22 )**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1804 / 2011

இம்மேல்முறையீடானது பாட்னா உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 281/1997–ல் 17.2.2009 தேதியன் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையிலிருந்து எழுகிறது

உடன்

குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1805 / 2011

மேல்முறையீட்டாளருக்கான வழக்கறிஞர்கள் .... சந்தோஷ் மிஸ்ரா, மனீஷ் குமார், செல்வி.ஷர்மிளா உபாத்யாய , செல்வி. அபராஜிதா சிங், டி.மஹிபால்

எதிர்மேல்முறையீட்டாளருக்கான வழக்கறிஞர்கள் ..... பி.கே.தே, எ.கே.ஸ்ரீவாத்ஸவா, அரவிந்த் குமார் சர்மா, அசோக் குமார் ஸ்ரீவாத்ஸவா

**இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர் சுபாஷ் ரெட்டி அவர்களால் பகரப்பட்டது.**

1. இந்த இரண்டு குற்றவியல் மேல்முறையீடுகளும் பாட்னா, சிறப்பு நீதிபதி ,சிபிஐ (வடக்கு ), அவர்களால் சிறப்பு வழக்கு எண் 18 / 1982 – இல் 26.9.1997 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரைக்கு எதிராக எழுகிறது., அதனால் அவை இரண்டும் ஒன்றாக விசாரிக்கப்பட்டு மற்றும் இந்த தீர்ப்புரையின் முலம் தீர்வு காணப்படுகிறது.

2. இந்த மேல்முறையீடுகளில், பாட்னா, உயர்நீதிமன்றத்தால் குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள் 281 மற்றும் 282/1997–இல் 17.2.2009 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட பொதுத் தீர்ப்புரைக்கு எதிராக மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டது.

3. பாட்னா, சிறப்பு நீதிபதி , சிபிஐ ( வடக்கு ) அவர்கள் முன்னிலையில் உள்ள சிறப்பு வழக்கு எண் 18 / 1982 –இல் முறையே 3 மற்றும் 1–ம் குற்றம்சாட்டப்பட்ட நபர்களே இங்கு மேல்முறையீட்டாளர்கள் ஆவர். இந்திய தண்டனைச் சட்டம் ( இதச ) பிரிவு 409 மற்றும் 477 அ உடன் இணைந்த பிரிவு 120 ஆ மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம், 1947 ( சுருக்கமாக ஊ.த.ச ) பிரிவு 5(1) (இ) மற்றும் (ஈ ) உடன் இணைந்த பிரிவு 5(2) –இன் கீழான தண்டனைக்குரிய குற்றத்திற்காக அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். பாட்னா, சிறப்பு நீதிபதி , சிபிஐ ( வடக்கு ) அவர்களால் வழங்கப்பட்ட 26.9.1997 –ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையில் இ.த.ச., பிரிவு 120 ஆ உடன் இணைந்த பிரிவு 409 மற்றும் 477 அ கீழான குற்றத்திற்காக தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு, ஊ.த.சட்டம் பிரிவு 5(1) (ஈ) கீழான குற்றத்திற்காக பிரிவு 5(2) –இன் படி தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டனர்.

4. இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள், இ.த.ச., பிரிவு 409–இன் கீழ் குற்றம் புரிந்ததற்காக 3 வருடங்கள் கடும் சிறை தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். குற்றவியல் மேல்முறையீட்டு எண்1805 /2011 –இல் உள்ள மேல்முறையீட்டாளருக்கு இதச பிரிவு 477 அ–இன் கீழான குற்றத்திற்காக மேலும் 3 வருடங்கள் கடும் சிறை தண்டனை

விதிக்கப்பட்டது. ஊ.த.சட்டம் பிரிவு 5(1) (இ) மற்றும் (ஈ) கீழான குற்றத்திற்காக அவர்களுக்கு மேலும் 2 வருடங்களுக்கு கடும் சிறைத் தண்டனையும் அத்துடன் ஒவ்வொரு குற்றத்திற்காகவும் ருபாய் 10,000–ம் அபராதம் விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டது.

5. மேல்முறையீட்டாளர்களான 3–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் (ஷிவ் சங்கர் பிரசாத் சிங்) மற்றும் 1–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் (ராம் தியோ பிரசாத்) ஆகியோர் மீது குற்றம் பதிவு செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டதால், அவர்கள் முறையே குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள் 281/1997 மற்றும் 282/1997–ஐ பாட்னா உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட குற்றத்தை உறுதி செய்தது, அதே வேளையில் தண்டனையை குறைத்தும் தீர்ப்பளித்தது. குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1804/2011–இல் மேல்முறையீட்டாளருக்கு இதச பிரிவு 120 ஆ உடன் இணைந்த பிரிவு 409–இன் கீழ் 6 மாதங்கள் கடுஞ்சிறைதண்டனைக்கு உட்படுத்தவும், இதச பிரிவு 477 அ–இன் கீழ் அவருக்கு மேலும் 6 மாதங்கள் கடுஞ்சிறைத் தண்டனை விதித்தது. அந்த மேல்முறையீட்டாளருக்கு ஊ.த. சட்டம் பிரிவு 5 (1)(இ) உடன் 5(2)–இன் கீழ் மேலும் 6 மாதங்கள் கடுஞ்சிறை தண்டனைக்கு உட்படுத்தவும் மற்றும் ருபாய் 15,000 அபராதம்

விதித்தும் தீர்ப்பளித்தது. குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1805/2011–இல் மேல்முறையீட்டாளர் ( ராம் தியோ பிரசாத் ) பொறுத்தவரையில், அவரது தண்டனை குறைக்கப்பட்டு, இதச பிரிவு 409–இன் கீழ் 6 மாதங்கள் கடுஞ்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் இதச பிரிவு 477அ–ன் கீழ் அவருக்கு மேலும் 6 மாதங்கள் கடும் சிறை தண்டனை மற்றும் ஊ.த.சட்டம் பிரிவு 5(1) (இ) உடன் 5 (2).இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்திற்காக அவருக்கு மேலும் 6 மாதங்கள் கடுஞ்சிறைத் தண்டனையும் மற்றும் ருபாய் 15,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

6. மேற்கண்ட இரண்டு மேல்முறையீடுகளும், 4–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான அதாவது ராம் நாத் சர்மா (எ) ராம் நாத் பிரசாத் சர்மாவால் தாக்கல் செய்த குற்றவியல் மேல்முறையீட்டு எண்299/1997 மற்றும் 2–ஆம் குற்றஞ்சாட்டப்பட்டரால் அதாவது (ராம் உதய் சிங்)ஆல் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டுடன் ஒன்றாக சேர்த்து தீர்வு காணப்படுகிறது. ராம் நாத் சர்மாவினால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனுவை பொறுத்தவரையில், அந்த மேல்முறையீட்டுக்கான சிறப்பு அனுமதி ( குற்றவியல்) எண் 4005/2009–இல் 24/7/2009–ஆம் தேதியிட்டு வழங்கப்பட்ட இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் முலம் தள்ளுபடி செய்யப்பட்டது எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

7. அரசுத் தரப்பு வழக்கானது, பாட்னா, இந்திய உணவு பொருள் கழகம் (இ.உ.க) பிராந்திய அலுவலகத்தில் ( லஞ்ச ஒழிப்பு மற்றும் பாதுகாப்பு) துணை மேலாளரான எஸ்.பி.சிங் (அ.சா.5)இன் அறிக்கையின் மீது 23.12.1981–ஆம் தேதியிட்ட புகாரை (சான்றாவணம் 8) அடிப்படையாக கொண்டது. அந்த புகாரின் அடிப்படையில், முதல் தகவல் அறிக்கை (மு.த.அ) ( சான்றாவணம் 9 ) பதிவு செய்யப்பட்டது. அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், மார்ச் 1980–களில் ராம் தியோ பிரசாத் கிடங்கு பொறுப்பாளராக பிகுசாராய் மாவட்டம், தில்ராத்,இ.உ.கஇருந்தபோது மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ராம் நாத் சர்மா, கூடுதல் பொது மேலாளர்–III பவுரணி, ரயில்வே சைடிங்,இஉக பொறுப்பாளர் மற்றும் ஒரு ராம் சங்கர் பிரசாத் சிங் ஒப்பந்ததாரர் கையாளுதல் மற்றும் போக்குவரத்து உசே கி இ உ க ஆகியோருடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டு, 540 உரமுட்டைகளை ( யூரியா ) கையாடல் செய்தனர் என்பதாகும். 24.3.1980 அன்று பவுரணி தொடர்வண்டி நிலையத்தில் என்.ஆர் 17797 மற்றும் என்.ஆர் 61690 எண்களைக் கொண்ட இரண்டு சரக்கூர்தி பெட்டிகளில் ஒவ்வொன்றிலும் முறையே 500 மற்றும் 540 யூரியா பைகளுடன் இறக்குவதற்காக நிறுத்தி வைத்திருந்ததாக சொல்லப்படுகிறது. அன்றைய தினமே குறிப்பிடப்பட்ட உரமுட்டைகள் இறக்கப்பட்டு மற்றும் ராம் நாத் சர்மாவினால் அந்த சரக்குகள் ஒப்படைப்பு செய்ய எடுத்து செல்லப்பட்டன. அரசு தரப்பு வழக்கில்

மேலும் கூறப்படுவது என்னவென்றால், 1980–களில் தில்ராத்தில் உள்ள உசே கி இ உ க– இல் ராம் நாத் பிரசாத் கூடுதல் பொதுமேலாளர் –I, கிடங்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்ததாகவும் மற்றும் அவரே கிடங்கு எல்லாவற்றிக்கும் ஒட்டுமொத்த பொறுப்பாளர் மற்றும் அனைத்து பொருட்களின் பாதுகாப்பு மற்றும் கிடங்கில் உள்ள பதிவேடுகளை முறையாக பராமரிப்பதற்கும் அவரே தனிப்பட்ட முறையில் பொறுப்பாளர். ஷிவ் சங்கர் பிரசாத் சிங் கூடுதல் பொதுமேலாளர்–III–ஆக பணி செய்து கொண்டிருந்தார் எனவும் மற்றும் கிடங்கில் சரக்குகளை பெற்று கொள்ளுவதற்கு அவரே பொறுப்பாளர் என்றும் சொல்லப்படுகிறது. அரசு தரப்பு வழக்கானது 500 மற்றும் 540 யூரியா பைகள் முறையே மெட்ராஸ் மற்றும் கட்டக்கிலிருந்து ஏற்றப்பட்டு , பவுரணியில் அவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன மற்றும் 24.3.1980 அன்று தொடர்வண்டி நிலையத்தில் பணியில் அமர்த்தப்பட்ட இக்கழகத்தின் பணியாளரிடம் ஒப்படைப்பு செய்வதற்காக அந்த இரண்டு சரக்கூர்தி பெட்டிகள் இருப்புபாதை பக்கவாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அரசு தரப்பு வழக்கானது 25.3.1980 அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருந்து 1040 யூரியா பைகளை ராம் நாத் சர்மா எடுத்து சென்றார் மற்றும் சரக்குகளை பெற்று கொண்டதற்கு அடையாளமாக தொடர்வண்டி ஒப்படைப்பு புத்தகத்தில் கையொப்பம் இட்டுள்ளார். இது 24.3.1980 மற்றும் 25.3.1980

தொடர்வண்டி ஒப்படைப்பு புத்தகம் பக்கங்கள் 12 மற்றும் 13–இல் காணப்படுகிறது.

8. ராம் நாத் பிரசாத் சர்மா 24.3.1980 அன்று 500 யூரியா பைகளை ராம் சங்கர் சிங் –இன் பிரதிநிதியான ராம் உதய் சிங் –கிடம் ஒப்படைத்ததாகவும், அவர் ராம் நாத் பிரசாத் சர்மாவினால் 500 யூரியா பைகளை பிஆர்ஜ 7851 மற்றும் பிஎச்எப்3155 எண்களை கொண்ட சரக்கு வண்டிகளில் கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்ட 14791 மற்றும் 14792 எண்கள் கொண்ட நுழைவு சீட்டுகளில் கையொப்பம் இட்டிருந்ததாக மேலும் சொல்லப்படுகிறது. அரசு தரப்பு வழக்கு யாதெனில், மேற்சொன்ன 500 யூரியா பைகளை கொண்ட சரக்குகள், 250 யூரியா பைகள் வீதம் பிஆர்ஜ 7851 மற்றும் பிஎச்எப் 3155 எண்களை கொண்ட இரண்டு சரக்கு வண்டிகளில் கொண்டு செல்லப்பட்டதாக சொல்லப்பட்டாலும், குற்றப்பத்திரிக்கையில் கூறப்பட்டள்ளதை போல, அவை கில்ராத்தில் உள்ள இஉக கிடங்கிற்க கொண்டு செல்லப்படவில்லை. இருந்தபோதிலும் 1980–ம் ஆண்டு மார்ச் மாதம் 24/25 தேதிகளில் பிரதான வாயிலில் உள்ள பதிவேடு (சான்றாவணம் 6), வருகை நேர்செய்தல் புத்தகம், 'ஜி' படிவம் மற்றும் 'ஓ' படிவங்களில் மேல்முறையீட்டாளர்கள் பொய்யான பதிவுருக்களை பதிவு செய்தார். ஷிவ் சங்ர் பிரசாத் சிங் –கூடுதல் பொது

மேலாளர்–III –ஆல் மேற்சொன்ன 500 பைகளும் கிடங்குகளில் பெறப்பட்டுள்ளதாக காட்டப்பட்டு, அவற்றில் ராம் தியோ பிரசாத்தும் கையொப்பம் இட்டுள்ளார். தில்ராத் உசேகிஇக –இல் உட்புற பதிவேட்டின் அடிப்படையில் மேற்சொன்ன ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு சரக்கு வண்டிகளில் (மேற்சொன்னவாறு) தலா 250 பைகள் வீதம் வந்ததாக அதில் ஷிவ் சங்கர் பிரசாத் சிங் காட்டியுள்ளார் அரசுத் தரப்பு வழக்கு மேலும் கூறுவதாவது, ராம் நாத் சர்மாவினால் மீதமுள்ள 540 யூரியா பைகள் பெறப்பட்டதாகவும், அவை தலா 270 யூரியா பைகள் வீதம் சரக்கு வண்டிகளில் கொண்டு சேர்க்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டாலும், ஆனால் அதே அளவு குற்றஞ்சாட்டப்பட்ட அனைவராலும், யாரெல்லாம் முறைகேடு செய்வதற்காக கூட்டு சதியில் ஈடுபட்டனரோ அவர்களால் கையாடல் செய்யப்பட்டது புலனாய்வில் வெளிப்பட்டது.

9. இங்குள்ள மேல்முறையீட்டாளர்களின் குற்றத்தை நீருபிக்க அரசு தரப்பில் 21 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். சா.1 – அனுமதி உத்தரவை நீருபிக்க ஒரு தட்டச்சர் (திரு. சங்கர் சௌத்ரி)அ.சா.1 –ஆக விசாரிக்கப்பட்டார். அ.சா2 (எஸ்.பி.லால்) துணை மேலாளர் (ஒப்பந்தம்). அவர்கள் தில்ராத்தில் உள்ள இஉக–இல் கையாளுதல்/ போக்குவரத்து

ஒப்பந்ததாரர் நியமனம் குறித்து நீருபிப்பதற்காக விசாரிக்கபட்டார். 1979–1980–களில் கூடுதல் பொதுமேலாளராக உ.சே.கி.இ.உ.க ,தில்ராத்தில் பணியில் அமர்த்தபட்டிருந்த அ.சா4 பிரிட்ஜ் தியோ ராம். இவர் தில்ராத்தில் உள்ள உ.சே.கி.இ.உ.க –இன் 25.3.1980 –இல் இருந்து 24.12.1981 வரையிலான 'ஒ' படிவம் ( சான்றாவணம் 4 )–ஐ நீருபிக்க விசாரிக்கப்பட்டார். சா.8–இ.ன் கீழ் புகாரை நீருபிக்க ஜனவரி 1982–இல் இஉக–இல் துணைமேலாளர் (லஞ்ச ஒழிப்பு மற்றும் பாதுகாப்பு ) சுதர்சன் பிரசாத் சிங் அ.சா.5–ஆக விசாரிக்கப்பட்டார். சா.8 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை (சா.9 ).ஐ நீருபிக்க, அக்டோபர் மாதம் 1982.இல் ஆய்வாளராக பாட்னா சி.பி.ஐ–இல் பணியிலிருந்த ஜெ.பி.வர்மா விசாரிக்கப்பட்டார். சரக்கு பெட்டகம் பராமரிப்பு பதிவேடுகளில் உள்ள உள்ளீடுகளை நீருபிக்க தலைமை சரக்கு எழுத்தரான ஒரு முகமது இப்ராகிம் என்பவர் அ.சா 7 ஆக விசாரணை செய்யப்பட்டார். பி.எச்.எப் 3155 எண் தாங்கிய சரக்கு வண்டியின் ஒட்டுநரான ராம் பரன் மாத்தோ ( அ.சா.9 ), மற்றும் பி.எச்.எப் 3155 எண் தாங்கிய சரக்கு வண்டியின் கலாசியான ராஜேந்திர மாத்தே அ.சா.10, இவர்களும் விசாரிக்கப்பட்டனர். அ,சா,11 ஆக தலால் பிஸ்வாஸ் உதவி மேலாளர், கணக்கு, இஉக, விசாரிக்கப்பட்டார்.(சா.12) அறிக்கைளை சமர்பித்த திரிலோக் ராம் உதவி மேலாளர் , தணிக்கை, பிராந்திய அலுவலகம்,

இஉக, பாட்னா அ.தா.12 – ஆக விசாரிக்கப்பட்டார். சரக்குகளை நேரடி சரிபார்ப்பு செய்த எம்.கே. பதாக் உதவி மேலாளர், இஉக அ.சா.13–ஆக விசாரிக்கப்பட்டார். அ.சா.14 மன்மோகன் சிங் பி.எச்.எப் 3155 எண் தாங்கிய சரக்கு வண்டியின் உரிமையாளர், அ.சா.15 பிரதுல் குமார் சிங் ,பிஆர்.ஐ 7851 எண் தாங்கிய சரக்கு வண்டியின் உரிமையாளர். அ.சா.16 ராம் நாராயண் சிங் தலைமை காவலாளி, சந்தைப்படுத்துதல் பிரிவு இஉக, அ.சா.17 ராம் சாகர் பஸ்வான் கூடுதல் பொது மேலாளர்.III தில்ராத், இஉக,, அ.சா.18 ராமா பாய் ,பிஆர்.ஐ 7851 எண் தாங்கிய சரக்கு வண்டியின் ஒட்டுநர், அ.சா.19 ஜெ,கே. சாமுவேல் அவர் அந்த தொடர்புடைய நேரத்தில் கேள்விக்குரிய ஆவணங்களின் துணை அரசாங்க ஆய்வாளர் ஆவார். அ.சா.20 ராம் பால் யாதவ் அவர் தில்ராத் கிடங்கில் டிசம்பர் 1978–இல் இருந்து டிசம்பர் 1980 வரையிலான காலத்தில் கூடுதல் பொது மேலாளர் III ஆக வேலை செய்தார். அ.சா.21 கே,என். சின்ஹா புலனாய்வு அதிகாரி அவர் அரசு தரப்புக்காக குற்றத்தை புலனாய்வு செய்தவர்.

10. எதிர்தரப்பினர்களின் சார்பாக இஉக, உதவி கிடங்கு மேலாளரான பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஒரு திரு. ஆனந்த் மோகன் சகாய் எ.சா.1–ஆக விசாரிக்கப்பட்டார்.

11. மேல்முறையீட்டாளருக்காக கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.சந்தோஷ் மிஸ்ரா மற்றும் செல்வி அபராஜிதா சிங் மற்றும் சிபிஐ–க்காக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. அசோக் குமார் ஸ்ரீவாத்சவா மற்றும் திரு.பி.கே.தே அவர்களுடைய வாதங்களை நாங்கள் கேட்டோம்.

12. இந்த மேல்முறையீடுகளில், மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது பதிவான அனைத்து ஆவணங்கள், அனைத்து சாட்சிகளின் வாக்குமூலங்கள், இஉக ஊழியர்களான அவர்கள் 1980 மார்ச் 24/25 தேதிகளில் 500 யூரியா பைகள் கிடங்கிற்கு வந்து சேர்ந்தன என சான்றுரைத்தனர், அது கணிக்கை தணிக்கை அறிக்கையும் ஆதரவு தந்தது. இதனை உயர்நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது என வாதிட்டார்.

13. தில்ராத்தில் உள்ள கிடங்கில் 500 பைகள் வந்து சேரவில்லை என்னும் முடிவுக்கு வருவதற்காக அரசுத் தரப்பு முக்கியமான சாட்சிகளாக பிஎச்எப் 3155 சரக்கு வண்டியின் ஓட்டுநர், கலாசி (கீளீனர்) மற்றும் உரிமையாளர் முறையே அ.சா.9, அ.சா10, அ.சா.14 மற்றும், பி.ஆர்.ஜ 7851 எண் கொண்ட சரக்கு வண்டியின் உரிமையாளர் மற்றும் நடத்துனர் முறையே அ.சா.15,அ.சா.18 ஆகியோரை சார்ந்து இருந்தது. ஆனால் அந்த சாட்சிகளின் வாக்குமூலங்களை நியாயமாக ஆய்வு செய்யும் போது அதில்

பல்வேறு பொருந்தாமையையும், முரண்பாடுகளும் உள்ளது. மேலே சொல்லப்பட்ட சாட்சிகளின் வாக்குமுலத்தில் உள்ள அத்தகைய முரண்பாடுகளை கருத்திற்கொண்டு, நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அந்த சாட்சிகளின் சான்றுரைகளை சார்ந்திருந்து தவறிழைத்துவிட்டது என்று சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் அரசுத் தரப்பு 1040 பைகளை கையாடல் செய்துள்ளதை காட்ட தவறியுள்ளது என்று மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டனர். அதற்கு மாறாக புகாரில் 540 பைகள் மட்டுமே கையாடல் செய்திருப்பதாக பதிவான ஆவணங்கன் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் அறிவுறுத்துகிறது.

14. அத்தகைய குற்றச்சாட்டை கருத்திற்கொண்டு, 500 பைகளை கொண்டு செல்லப்படும் முறைகுறித்த கேள்வி முக்கியமானதாக இருக்காது மற்றும் 500 பைகள் கொண்டு செல்லுதல் தொடர்காக சாட்சிகளின் வாக்குமுலத்தை விசாரணை நீதிமன்றம் அத்துடன் கூட உயர்நீதிமன்றமும் நம்பி இருக்க கூடாது. மேலும், 540 பைகள் குறித்து மட்டுமே முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றும், அரசுத் தரப்பு குற்றஞ்சாட்டுவதைப்போல 1040 யூரியா பைகள் குறித்தல்ல என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

15. சான்றாவணம் 24 கீழான ஆவணத்தை குறிப்பிடும் போது, 500 யூரியா பைகள் தில்ராத்தில் உள்ள கிடங்கிலிருந்து 25.3.1980 அன்று ஒப்படைக்கப்பட்டதை இந்த ஆவணம் தெளிவுப்படுத்துகிறது என வாதிடப்பட்டது. மேலும் அ.சா4 மற்றும் அ.சா20.இன் வாக்குமூலங்களை குறித்து பார்க்கும்போது, அந்த சாட்சிகள் பைகளை எடை போட்டு, எண்ணி மற்றும் அடுக்கி வைத்த பிறகே ஆவணங்களை தயாரிப்பதில் ஈடுபட்டனர் என்றும், அவர்கள் தகுதியான சான்றுரைஞர்கள் எனவும், அவர்கள் 1980 மார்ச் மாதம் 24/25 தேதிகளில் 500 பைகளை பெற்று கொண்ட உண்மை குறித்தே சான்றுரைத்தனர் எனவும் கூறினார். மேல்முறையீட்டாளர்கள் தான் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றத்தை புரிந்தனர் என முடிவுக்கு வருவதற்காக அ.சா4 மற்றும் அ.சா 20 சாட்சிகளை உயர்நீதிமன்றம் மற்றும் விசாரணை நீதிமன்றமும் நிராகரித்திருக்க கூடாது என்பது மேல்முறையீட்டாளர்களின் வழக்காகும்.அ.சா4 மற்றும் அ.சா20 சாட்சியங்கள் ஊகங்கள் மற்றும் அனுமானங்களை சார்ந்திருக்கவில்லை. அரசுத் தரப்பும் அத்தகைய சாட்சியங்களை எதிர்க்கவில்லை என்பதை பாராட்டவில்லை என்ற வாதத்தை முன்வைத்தார். அரசுத் தரப்பால் முன்வைக்கப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையில், வருகை கணக்கு புத்தகம் ( டி படிவம் ) தினசரி ஒப்படைப்பு பதிவேடு ( ஜி படிவம் ) மற்றும் கிடங்கு சரக்கு இருப்பு பதிவேடு (டி படிவம் ) ஆகியவற்றில் ஷிவ் சங்கர்

பிரசாத் சிங் பிரதான வாசலில் செய்த உள்ளீடுகள் அடிப்படையில் வேறு அதிகாரிகள் அதனை பராமரித்து வந்தனர்.

16. கற்றறிந்த வழக்குரைஞர்கள், பதிவாவணத்திலுள்ள வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியத்தின் மீது எங்கள் கவனத்தை ஈர்த்து, அரசு தரப்பில் பதிவு செய்யப்பட்ட சான்றாதாரங்களில் உறுதி தன்மை இல்லை எனவும், அரசுத் தரப்பு மேல்முறையீட்டாளருக்கு எதிராக கூறப்பட்ட குற்றத்தை நிரூபிக்கத் தவறிவிட்டது எனவும், கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக அவர்களை தண்டித்து விசாரணை நீதிமன்றம் பிழைப்புரிந்துள்ளது என்றும் பதிவாவணத்திலுள்ள சான்றாவணங்களை உரிய நோக்கத்தில் பரிசீலிக்காமல் உயர் நீதிமன்றம் அதை உறுதி செய்துள்ளது என்றும் சமர்ப்பித்தனர்.

17. மறுபுறம், அரசுத் தரப்புக்காக முன்நிலையான கற்றறிந்த வழக்குரைஞர், பதிவுறுவிலுள்ள வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியத்தை குறிப்பிட்டு, அரசுத் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணம் ஒரே சீரானது என்றும், அரசுத் தரப்பு மேல்முறையீட்டாளர்தான் குற்றவாளி என ஐயத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளது என்றும் சமர்ப்பித்தார். முதலில் ஒரு புகார் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல்

அறிக்கையில் 1040 உர முட்டைகளில் 540 உரமுட்டைகள் கையாடல் நடந்திருப்பதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது, ஆனால் புலனாய்விற்கு பின்னர் மொத்தமாக 1040 உரமுட்டைகளும் கையாடல் செய்திருப்பதாக வெளிப்பட்டது. அதன்படி 500 யூரியா பையள் வந்து சேர்ந்ததாக காட்டுவதற்காக தில்ராத்தில் உள்ள இஉக கிடங்கில் உள்ள பதிவேடுகளில் 500 பைகள் அளவிற்கு தவறான உள்ளீடுகள் செய்யப்பட்டிருந்தன என்று சமர்ப்பித்தார். அதற்காக மேல்முறையீட்டாளர், அதாவது ஷிவ் சங்கர் பிரசாத்தால் பராமரிக்கப்படும் வாயில் நுழைவு சீட்டு பதிவேடுகளில் 500 உர முட்டைகள் ஒப்படைப்பது சம்பந்தமாக தவறான உள்ளீடுகளை இட்டுள்ளார். அதேபோன், ராம் தியோ பிரசாத் பெயர் கொண்ட மேல்முறையீட்டாளரும் அவரால் பராமரிக்கப்பட்டு வருவதில் பொய்யான உள்ளீடுகளை செய்ததாகவும், 'ஜி' படிவம் மற்றும் கிடங்கு சரக்கு பதிவேடான 'ஒ' படிவம் ஆகியவை மோசடியாக திருத்தப்பட்டு மற்றும் 500 உரமுட்டைகள் வந்து சேர்ந்தன மற்றும் இறக்கப்பட்டன என்பதை காட்டுவதற்கு பொய்யான உள்ளீடுகள் இடப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் கூட்டு சதி செய்து கணக்குகளை பொய்யாக்க காட்டி, அதன்முலம் குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்தனர் என்பதை வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியத்தின்மூலம் அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபித்துள்ளதாக வாதிட்டார். அத்தகைய எழுச்சிமிக்க ஆதாரங்களின்படி, விசாரணை

நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பளித்தது சரி என்றும், உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு எதிரான குற்றத் தீர்ப்பை உறுதி செய்ததும் சரி என்றும், கீழமை நீதிமன்றங்களால் பதிவு செய்யப்பட்ட ஒருமித்த முடிவுகளில் தலையிடுவதற்கு எந்த காரணமும் இல்லை எனவும் எடுத்துரைத்தார். பதிவுறுக்களிலுள்ள சான்றாவணங்களை கருத்திற்கொண்டு பார்க்கையில், பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகள் தலையீடு கொரும் அளவிற்கு முறைதிறம்பியதோ, பிழையானதோ அல்ல என்று கூறமுடியாது என்று சமர்ப்பித்தார். இந்த மேல்முறையீடுகளில் தகுதிக்கூறு இல்லாததால் தள்ளுபடி செய்யவதற்குரியது என கற்றறிந்த வழக்கறிஞர் எடுத்துரைத்தார்.

18. தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களை கேட்டோம் மற்றும் பதிவாவணத்திலுள்ள வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியத்தையும், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைகளையும் பார்வையிட்டோம்.

19. ஆரம்பத்திலேயே, முதலில் அளிக்கப்பட்ட புகாரில் 540 யூரியா பைகள் மட்டுமே கையாடல் செய்யப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ஆனால் மொத்தமாக 1040 யூரியா பைகள் கையாடல் செய்யப்பட்டிருப்பது புலனாய்வில் வெளிப்பட்டது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேல்முறையீட்டாளர்களும் மற்றும் மற்ற

குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் குற்றஞ்சார்ந்த கூட்டுசதி செய்து, கணக்குகளை பொய்யாக்குவதில் ஈடுபட்டனர் என்பது அரசுத் தரப்பின் முக்கிய குற்றச்சாட்டாகும். 1040 யூரியா பைகளில் 500 பைகள் பி.ஆர்.ஐ 7851 மற்றும் பி.எச்.எப் 3155 எண்களை கொண்ட சரக்கு வண்டிகளில் தலா 250 பைகள் வீதம் தில்ராத்தில் உள்ள இந்திய உணவுப் பொருள் கழகத்தின் கிடங்கில் ஒப்படைப்பு செய்வதற்காக ஏற்றப்பட்டதாக காட்டப்பட்டது, ஆனால் அந்த மாதிரி உர முட்டைகள் எதுவும் உண்மையாக ஒப்படைக்கப்படவில்லை எனக் கண்டறியப்பட்டது மற்றும் இ,உ.பொ. கழகத்தின் பதிவேடுகள் பொய்யாக்கப்பட்டன. குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1804/2011 –ல் மேல்முறையீட்டாளர் ஷிவ் சங்கர் பிரசாத் சிங்கிற்கு எதிராக அரசுத் தரப்பின் முக்கிய வழக்கு யாதெனில், நுழை வாயிலில் உள்ள பதிவேடுகளில் உள்ளீடுகள் செய்வதற்கு அவ பொறுப்பாவார் மற்றும் 500 யூரியா பைகள் உண்மையாக வராதபோது அத்தகைய உரங்கள் வந்து சேர்ந்ததாக பொய்யான உள்ளீடுகளை இட்டுள்ளார் என்பதாகும். இதைப்போல, மற்ற பதிவேடுகளான 'ஒ' மற்றும் 'ஜி' பதிவேடுகளில் பொய்யான உள்ளீடுகள் செய்யப்பட்டதற்கும் ராம் தியோ பிரசாத் பொறுப்பாளியாவார். முதலில் அளிக்கப்பட்ட புகாரில் 540 யூரியா பைகள் மட்டுமே கையாடல் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதாலேயே , விசாரணைக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்ட

குற்றப்பத்திரிக்கையில் மொத்தமாக 1040 யூரியா பைகள் கையாடல் செய்யப்பட்டுருப்பதாக வெளிப்படுத்தியிருந்ததை ஒருவரும் புறக்கணிக்கமுடியாது. அ.சா.21 ஆக விசாரிக்கப்பட்ட புலானய்வு அதிகாரியின் வாக்குமுலத்தில் இருந்தும் இது தெளிவாகிறது. இதுவரையில் , 500 யூரியா பைகளை பொறுத்தவரையில் அவைகள் பி.ஆர்.ஐ 7851 மற்றும் பி.எச்.எப் 3155 எண்களை கொண்ட சரக்கு வண்டிகளில் ஏற்றப்பட்டன ஆனால் அவைகள் தில்ராத்தில் உள்ள இ..உ.பொ. கழகத்தின் கிடங்கிற்கு கொண்டுசெல்லப்படவில்லை என பதிவான ஆதாரங்களில் இருந்து தெளிவாகிறது. பிரதான வாயிலில் உள்ள பதிவேடு, 'ஒ' மற்றும் 'ஜி' படிவத்திற்காக பராமரிக்கப்படும் மற்ற பதிவேடுகளில் அந்த அளவு உரங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக காட்டப்படுவதற்காக பொய்யான உள்ளீடுகளை செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

20. குறிப்பிட்ட அந்த சமயத்தில், மேல்முறையீட்டாளர் ஷிவ் சங்கர் சிங் கூடுதல் பொது மேலாளர் III –ஆக பணிபுரிந்ததும், கிடங்கில் சரக்குகளை பெறுவதற்கு பொறுப்பாளராக இருந்தார் என்பம் மறுப்பதற்கில்லை. மேல்முறைட்டாளர் ஷிவ் சங்கர் பிரசாத் சிங் பி.ஆர்.ஐ 7851 மற்றும் பி.எச்.எப் 3155 எண்களை தாங்கிய சரக்கு வண்டிகளில்

25.3.1980 அன்று ஒவ்வொன்றிலும் 250 யூரியா பைகள் வந்து சேர்ந்ததாக காட்டியுள்ளது மேற்படி சான்றாதாரங்களிலிருந்து தெளிவாகிறது. 6.10.1982 மற்றும் 6.11.1982–க்கும் இடைப்பட்ட காலத்தில் நேரடி சரிபார்ப்பும் செய்யப்பட்டது மற்றும் அதற்கு சற்று முன்பாகவே, இரண்டு சரக்கு வண்டிகளில் 500 யூரியா பைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டதை குறிப்பிடும் வகையில், 1.10.1982 அட்டவணை ( சா.24 )–இல் இருப்பில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது பதிவான ஆதாரங்கள் முலம் தெளிவாகிறது. அந்த அட்டவணையின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆவணமானது, சான்றாவணம் 24, அன்றாட வணிக பயன்பாட்டு தேவைக்காக பராமரிக்கப்படுகின்ற ஆவணம் அல்ல, அவை உண்மையில் கொண்டு வரப்படாவிட்டாலும், உரமுட்டைகள் வந்த சேர்ந்தன என்பதை காட்டுவதற்காக மட்டுமே அது தயாரிக்கப்பட்டது. அ.சா 17 வாக்குமுலத்தை பொறுத்தவரையில், அதாவது, ராம் சாகர் பாஸ்வானை பொறுத்தவரையில், அதில் அரசுப் தரப்பு சார்ந்திருக்கவில்லை, மேலும் அவர் பிழை சாட்சியாக அறிவிக்கப்பட்டார்.

21. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர், அ.சா4 மற்றும் அ.சா20 சாட்சியங்களை பெரிதும் வலியுறுத்தினார். அவர்கள் சா.24–இன் அடிப்படையில் 25.3.1980 அன்று 500 யூரியா பைகளை ஒப்படைத்தது பற்றி கூறியிருந்தனர். ஆனால் சா.24 கீழான அந்த ஆவணம் முதல் தகவல்

அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தான் தயாரிக்கப்பட்டது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மார்ச் 1980–இல் சம்பவம் நடந்தது மற்றும் சா.24 கீழான ஆவணம் 1.10.1982 அன்று தான் பதிவுறுவில் கொண்டு வரப்பட்டது. மேற்சொன்ன சான்றாவணத்தை, பதிவுறுக்களிலுள்ள மற்ற வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியத்துடன் பரிசீலித்தால், அது மேல்முறையீட்டாளரின் வழக்கை பொய்யாக்குகிறது. உண்மையில் ஒரு சரக்கு வண்டி, 25.3.1980 அன்று 250 யூரியா பைகளை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்டது ஆனால் தில்ராத்தில் உள்ள உ.சே.கி.இ.உ.பொ.க–இல் ஒப்படைப்பு செய்வதற்கு பதிலாக அது திசை திருப்பப்பட்டு, அந்த உரங்கள் வேறொரு இடமான மன்ஜ்ஹால்–இல் ஒப்படைக்கப்பட்ட. 250 யூரியா பைகளை கொண்டு செல்வதற்காக உபயோகிக்ப்பட்டதாக சொல்லப்பட்ட பி.ஆ.ஐ 7851 எண் கொண்ட மற்றொரு சரக்கு வண்டி ஒருபோதும் உரங்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்படவில்லை என்பது பதிவாவணத்திலுள்ள சான்றாவணத்திலிருந்து தெளிவாகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை அழுத்தமாக நிருபிக்கும் பதிவான அந்த நேர்மறையான வாதங்களை புறந்தள்ள எந்தவொரு காரணமும் இல்லை. விசாரணை நீதிமன்றம் அத்துடன் மேல்முறையீட்டு நீதிமன்றமும் சரியாகவே,

கேள்விக்குரிய உரிமையாளர், ஓட்டுநர் மற்றும் வாகனத்தின் கலாசி ஆகியோரின் வாக்குமுலங்களை சார்ந்துள்ளது.

22. பதிவாவணத்திலுள்ள ஒட்டுமொத்த வாய்மொழி மற்றும் ஆவணமொழி சாட்சியத்தை பரிசீலித்ததன்பேரில், அரசுத் தரப்பு நியாயமான காரணத்திற்கு அப்பால் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கத் தவறிவிட்டது என்று நாங்கள் கருதுகிறோம். பதிவாவணத்திலுள்ள சான்றாவணத்தை கருத்திற்கொண்டு, விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டு, மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்ட காண்முடிவுகளில் தலையீடு கோரும் அளவிற்கு அது முறைத்திறம்பியதோ பிழையானதோ அல்ல என கூறமுடியாது. குற்றமுறு உட்கருத்துடன் கையாடல் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டைத் தவிற, அனைத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களும் கூட்டுச்சதியில் ஈடுபட்டனர் என்றும், அவர்கள் இதச பிரிவு 120 ஆ –இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என்பது அரசுத் தரப்பின் குறிப்பிட்ட வழக்காகும். மேலும் மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் அதாவது ராம் நாத் சர்மா (எ) ராம் நாத் பிரசாத் சர்மாவினால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனு, சி.அ.ம. (குற்றவியல்) எண் 4005/2009, 24.7.2009 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம்

சிறப்பு அனுமதி மனு நிலையிலேயே இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

23. மேற்சொன்ன காரணங்களின்பேரில். இந்த மேல்முறையீடுகளில் எந்த தகுதிப்பாட்டை நாங்கள் காணவில்லை, அதன்படி அது முறையே தள்ளுபடி செய்யப்படுகிறது. அதன் விளைவாக மேல்முறையீட்டாளரின் பிணை முறிவு ரத்து செய்யப்படுகிறது. இன்றிலிருந்து நான்கு வார காலத்திற்குள் எஞ்சியுள்ள தண்டனையை அனுபவிக்க மேல்முறையீட்டாளர்கள் சரணடைய வேண்டியுள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக சரணடைய தவறினால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது எதிர்மேல்முறையீட்டாளர் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

**<u>பொறுப்புத் துறப்பு</u>**

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."